தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## பெரம்பலூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(07.09.2022 முதல் 11.09.2022)

அறிக்கை எண்: 71/2022 தேதி: 06.09.2022

### பெரம்பலூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 27 °செ முதல் 36 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 23 °செ முதல் 25 °செ ஆகவும் பதிவானது. மேலும் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

### பெரம்பலூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (07.09.2022 முதல் 11.09.2022)

| கடந்த வார வானிலை (02.09.2022 முதல் 05.09.2022) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (07.09.2022 முதல் 11.09.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 02/09 | நாள்-2 03/09 | நாள்-3 04/09 | நாள்-4 05/09 | தேதி | நாள்-1 07/09 | நாள்-2 08/09 | நாள்-3 09/09 | நாள்-4 10/09 | நாள்-5 11/09 |
| 4.1 | 0 | 0 | 12.1 | மழை (மி.மீ.) | 4 | 0 | 4 | 0 | 0 |
| 27 | 33 | 35 | 36 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 34 | 35 | 35 |
| 24 | 25 | 25 | 23 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 25 | 26 | 26 |
| 6 | 5 | 6 | 5 | மேகமூட்டம் (ஆக்டா) | 4 | 5 | 5 | 4 | 4 |
| 90-55 | 80-60 | 80-51 | 86-77 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-60 | 70-60 | 70-60 | 70-55 | 70-55 |
| 6 | 9 | 14 | 11 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| தெற்கு | தென் தென் மேற்கு | கிழக்கு | தெற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

### பெரம்பலூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 07.09.2022 மற்றும் 09.09.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25 °செ முதல் 26 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| நெல் | | நெல் நாற்றங்காலில் விதைகள் இடம்பெயர்தலை தவிர்க்க, விதைத்த 2 நாட்களுக்கு மாலை வேலையில் மிதமான அளவில் தண்ணீர் பாய்ச்சவும். |
| | | நெல் நாற்றங்காலில் ஒரு சென்ட்க்கு 2 கிலோ வீதம் டீ.ஏ.பி மேலுரமாக இடவேண்டும். நெல் நாற்றங்காலில் இலைப்பேனை தவிர்க்க விதைத்த 10 நாட்களுக்குள் அசார்டிராக்டின் 0.03 சதம் (3 மி.லி/லி) ஒட்டும் திரவமான காதி கோபுர பார் சோப் 3 கிராம் / லி என்ற அளவில் கலந்து நாற்றங்கால் நன்கு நனையும் படி கைத்தெளிப்பான் கொண்டு காலை அல்லது மாலை வேளைகளில் தெளித்தல் அவசியம். |
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் பரிந்துரைக்கப்படும் வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள் (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை வெயில் உலர்த்தி கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்தில் இருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம். |

## குறுஞ்செய்தி

நெல் நாற்றங்காலில் நெல் விதைக்கும் பொழுது மாலை வேளையில் லேசான தண்ணீர் கட்டி மறுநாள் காலையில் வடிக்கவும். இதனால் எதிர்பார்க்கப்படும் மழையினால் முளைக்கும் நெல் விதைகள் புரட்டுவதை தவிர்க்கலாம்.

**இயக்குநர்**